கட்டிடத் திணைக்களம்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடபொருட்கள்
தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை

நிறுவனத்தின் பெயர் : **கட்டிடங்கள் திணைக்களம்**

செலவினத் தலைப்பு இல. : **309**

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவன விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு..... 2

1.1 அறிமுகம்..... 2

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்..... 4

1.3 பிரதான செயற்பாடுகள்..... 8

1.4 நிறுவன அமைப்பு வரைபடம்..... 9

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்கள்..... 11

1.6 அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை இன் கீழ் வருகின்ற நிறுவனங்கள்/நிதிகள்..... 12

அத்தியாயம் 02 - செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்..... 13

2.1 கடந்தகால செயலாற்றல் 2021 வரை..... 13

2.2 2021 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்களின் சுருக்கம்..... 16

2.3 ஆலோசனைப் பிரிவின் செயலாற்றல்..... 17

2.4 புலமைச்சொத்து செயற்திட்டங்களின் சான்றுறுதிப்படுத்தல்..... 18

அத்தியாயம் 03 - 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றல் 19

3.1 நிதி செயலாற்றல் கூற்று..... 19

3.2 நிதி நிலைமை கூற்று..... 20

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று..... 21

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்..... 23

1. அறிக்கையிடல் காலம்..... 23

2. அளவீட்டின் அடிப்படை..... 23

3. வருமான அங்கீகாரம்..... 23

4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PP&E) அங்கீகாரம் மற்றும் அளவீடு..... 23

5. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம்..... 23

6. காசு மற்றும் காசுக்கு சமமானவை..... 23

3.5 வருமான சேகரிப்பின் செயலாற்றல்..... 23

3.6 ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயலாற்றல்..... 24

3.6அ நி.பி. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் என்ற வகையில் மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கு செலவிடுவதற்காக இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்..... 25

3.7 நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையிடல் செயலாற்றல்..... 26

3.8 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை **..... 27

அத்தியாயம் 04 - செயலாற்றல் குறிகாட்டிகள்..... 36

அத்தியாயம் 05- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைதலின் செயலாற்றல்..... 37

அத்தியாயம் 06 - மனித வள விவரக்குறிப்பு..... 38

6.1 ஆளணி முகாமைத்துவம்..... 38

6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுதல்..... 39

6.3 மனித வள அபிவிருத்தி..... 40

அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை..... 41

அத்தியாயம் 01 - நிறுவன விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

பொதுப் பணிகள் திணைக்களத்தின் (PWD) கீழ் செயல்பட்டிருந்த கட்டிடத் திணைக்களம் (னுழுடீ) 1969 இல் நிறுவப்பட்டதுடன் கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குப் பொறுப்பான ஒரு சுயாதீன நிறுவனமாக 5 தசாப்தங்களாக இயங்கி வருகின்றது. இந்த திணைக்களமானது கட்டிடம் மற்றும் அது தொடர்பான உட்கட்டமைப்புப் பணிகளில் செயற்படுகின்ற ஒரேயொரு அதிகாரம் மற்றும் ஆலோசனை நிறுவனமாக காணப்படுகின்றது. கட்டிட நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கட்டிட நிகழ்ச்சித் திட்டங்களின் எந்தவொரு கடப்பாடும் பற்றிய நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கான ஓர் நிறுவனமாக இது அழைக்கப்பட்டது.

திணைக்களத்தின் பணிகள் நிதி பிரமாணங்கள், திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேசிய அபிவிருத்தியிலும், பொது கட்டிட சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் இத்திணைக்களம் பாராட்டத்தக்க பங்கை வகிக்கின்றது.

அரசியலமைப்பின் 13 வது திருத்தத்துடன் இத்திணைக்களம் மறுசீரமைக்கப்பட்டது. இலங்கையில் பொது கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான அதிகாரமும் பொறுப்பும் இத்திணைக்களத்திற்கு உள்ளது. திணைக்களமானது செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பொறுப்புக்கூறல் பற்றிய அதன் பங்கை மீளவரையறை செய்துள்ளது.


பெயர் - கட்டிடங்கள் திணைக்களம்

சட்ட ரீதியான தகுதி - அரசுக்கு முழு உரிமையுடையது

அமைச்சு - கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

அலுவலகம் - இரண்டாவது மாடி
செத்சிறிபாய, பத்தரமுல்லை
இலங்கை
தொலைபேசி 94 11 2862588 தொலைநகல். 94 11 2864771

மின்னஞ்சல். **dgb@buildingsdept.gov.lk**
இணையம். www.buildingsdept.gov.lk



உரு 1 : கட்டிடங்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலக அமைவிடம்

நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையில் பொது கட்டிடங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதற்கு பொறுப்பான முன்னோடி அரசாங்க அமைப்பாக 5 தசாப்தங்களாக கட்டிடத் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது. இந்த திணைக்களம் இப்போது மாறிவரும் பொருளாதார மற்றும் தொழில்நுட்பச் சூழலில் தொழில்முனைவு மற்றும் புத்தாக்க நிறுவனமாக மாற்றமடைந்துள்ளது. திணைக்களம் அதன் வகிபாகம் மற்றும் செயற்பணி கூற்றை மீள வரையறை செய்யத் தொடங்கியுள்ளதுடன் இப்போது செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பொறுப்புக்கூறல் அம்சங்களில் ஒரு குறித்துரைத்த தொடர்பைக் கொண்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட செயலற்றலுக்கான அளவுகோல்களை அமைக்கவும், பணியாளர்களை அளவிட்டு கண்காணித்துக் கட்டுப்படுத்தவும், இணக்கப்பாட்டை வெளிப்படுத்தவும், வெளிவாரி அறிக்கைகளை உருவாக்கவும், செயலாற்றலை கற்றுக் கொண்டு மேம்படுத்தவும் பொறியியலாளர்கள், துணை அதிகாரிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடையே தகவல்தொடர்புகளை மேம்படுத்தவும் இந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் திணைக்களத்தின் செயலாற்றல் பாராட்டத்தக்க அளவில் உள்ளதுடன் திணைக்களத்தால் கையாளப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் பொழிப்பாக்கப்பட்டுள்ளன. மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவினங்களின் பொழிப்பை இதனையொத்த ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது வெளியீட்டுக் கிரயம் குறைந்ததாகவும் வினைத்திறமையாகவும் இருந்ததுள்ளது என்பதை காணமுடிகின்றது.

செயலாற்றல் மற்றும் பணிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட இலக்குக்கு எதிரான செயல் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டதாக வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் காணப்படுகின்றது. கிடைக்கக்கூடிய வளங்களை மேம்படுத்துவதன் மூலம் திணைக்களத்தில் உள்ள பல்வேறுபட்ட தொழில்முறை ஊழியர்கள், தொழில்சார் சேவைகளை வழங்குகிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அதிகபட்ச செயல்திறனுடன் அடைவதற்காக திணைக்களம் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. திணைக்களத்தின் ஊழியர்களுக்கு வெளிவாரியாகவும் உள்வாரியாகவும் வெவ்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்துவதன் மூலம் இயலளவு அபிவிருத்தி வசதிகள் வழங்கப்பட்டன. வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய நிர்வாகம், நிதி மற்றும் இதர பணிகளின் கணக்காய்வை உள்ளக கணக்காய்வு பிரிவு மேற்கொண்டது.

ஆழமாக, தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திணைக்களத்தின் செயல்பாடுகளை மீள வடிவமைப்பதற்காக திணைக்களம் மீதான ஆய்வு அவசியமாக இருப்பதுடன் எதிர்காலத்தில் அரசுடன் தொடர்புடைய அனைத்து செயற்திட்டங்களையும் பொறுப்பேற்கும் இலக்கை அடைவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்

தூரநோக்கு

பொதுத்துறை நிறுவனங்கள் பாதுகாப்பான, சிக்கனமான, நிலைபேறான, நேர்த்தியான, கட்டமைக்கப்பட்ட சுற்றாடலில் நாட்டுக்கு உயர் தரமான சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக கட்டிட வேலைகளில் தொழில்நுட்ப அதிகாரியாக இருத்தல்.

செயற்பணி

அர்ப்பணிப்புள்ள பல்துறை நிபுணர்களின் குழுவின் மூலம் கட்டிடக்கலை வடிவமைப்பு, பொறியியல் வடிவமைப்பு, நிர்மாணம், பராமரிப்பு, செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் ஊடாக பொதுத்துறையின் கட்டிட வேலைகளை மேம்படுத்துவதற்கு மிகச்சிறந்த சேவைகளை வழங்குதல்.

குறிக்கோள்கள்

பொதுத்துறை கட்டிட வேலைகளின் அபிவிருத்திக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மிகச்சிறந்த சேவைகளை வழங்கும் முன்னோடி அரசாங்க அமைப்பாக திணைக்களம் காணப்படுகின்றது.

- எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் தொழில்முறை சேவைகள் மூலம் வாடிக்கையாளர்களை மகிழ்வித்தல்.
- சிறந்த கட்டமைக்கப்பட்ட சூழலை அடைவதற்கு சட்டரீதியான, ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் தொடர்புடைய தரநிலைகளை கடைபிடித்தல்.
- கண்காணிப்பு, வாடிக்கையாளர் கருத்து மற்றும் அறிவைப் புதுப்பித்தல் மூலம் எங்கள் சேவைகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துதல்.
- குழுப்பணி மூலம் எங்கள் அர்ப்பணிப்புள்ள பல்துறை நிபுணர்களின் ஒட்டுமொத்த பங்கேற்பை உறுதிசெய்தல்.
- ISO தர முகாமைத்துவ முறைமையின் தேவைப்பாடுகளுக்கு இணங்குதல் மற்றும் தொடர்ச்சியாக QMS ஐ மேம்படுத்துதல்.

திணைக்களத்தின் உத்தரவாதம்

வாடிக்கையாளரின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் திறன்களைக் கருத்தில் கொண்டு திணைக்களமானது செயல்திறன்மிக்க மற்றும் தடயவியல் உதவிகளை வழங்குகின்றது. கட்டுமானங்களுக்கான **உத்தரவாதத்தின்** தேவையை நாங்கள் **மதிப்பதுடன் இடரை நடுநிலையாக்குவதற்கு** பின்வருமாறு பொறுப்பேற்கின்றோம் :

அ. ஆயுட்கால தொழில்நுட்ப ரீதியான / நிதி ரீதியான வகைகூறல்
ஆ. மிகவும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிபுணரால் முழுமையான கட்டிடத் தேவைக்கான வடிவமைப்புகள்
இ. அனைத்து விதிகள், பிரமாணங்கள், தரம் மற்றும் பாதுகாப்பு நியமங்களை கடைபிடித்தல்
ஈ. கடந்த கால அனுபவத்தைப் பயன்படுத்தி சிறப்பாக உருவாக்கப்பட்ட மிகவும் துல்லியமான நோக்கெல்லை
உ. ஏனைய சேவை வழங்குநர்களின் தரம், பாதுகாப்பை ஆய்வு செய்தல், ஒத்துப்போகும் வடிவமைப்புகள், ஆவணம் மூலம் உறுதிப்படுத்துதல்
ஊ. ஒப்பந்தங்களை நிர்வகித்தல்
எ. அனுபவம் வாய்ந்த தொழில்சார் செயற்திட்ட முகாமைத்துவ சேவையின் விழுமியத்தை உறுதிப்படுத்துதல்
ஏ. முகாமைத்துவ கணக்காய்வு சிக்கல்களில் உதவிசெய்தல்
ஐ. ஒப்பந்த வழக்குகளில் உதவிசெய்தல்
ஒ. நியம தொழில்நுட்ப மதிப்பீட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டு மற்றும் பெறுகைக் குழுக்களில் பங்கேற்பதன் மூலம் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்

முகாமைத்துவ படிநிலை

பொறி. எம்.எச்.எம். இஸ்மாயில் - பணிப்பாளர் நாயகம்

பொறி. (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி - மேலதிக பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவை)

கட்டிடக்கலை. மேனக மங்களானந்த - மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை சேவை)

பொறி. ஏ. நவாஸ் ஆதம் - பணிப்பாளர் (நிர்மாண வலயம் 2)

பொறி. (திருமதி).டபிள்யு.ஏ.டபிள்யு. அபேவர்தன - பணிப்பாளர் (நிர்மாண வலயம் 1)

பொறி. (திருமதி). கே.லியனகே - பணிப்பாளர் (நிர்மாண வலயம் 3)

பொறி. (திருமதி). ஜி.எச்.ஹிரிமுத்துகொட - பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு)

பொறி. (திருமதி). என்.எம்.எம். மரிக்கார் - பணிப்பாளர் (பெறுகை மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி)

பொறி. (திருமதி). ஈ.டி.எம்.எஸ்.குணரத்ன - பணிப்பாளர் (மின்னியல் மற்றும் இயந்திரவியல்)

திருமதி. எஸ்.டி.டி.பி. சிங்கபுர - பணிப்பாளர் (நிர்வாகம்)

திருமதி. நிஷாந்தி பெமதுங்க - பிரதம கணக்காளர்

திருமதி. என்.ஜி.ஐ. விஜயரத்ன (மே 2021 வரை)
திரு. கேஜிபி பிரியந்த (ஜூலை 2021 முதல்) - பிரதம உள்ளக கணக்காளர்

கட்டிடக்கலை. (திருமதி.) ஆர்.எ.ரி.எஸ். ரணதுங்க - பணிப்பாளர் (கட்டிடக்கலை)

வழங்கப்பட்ட சேவைகள்

திணைக்களமானது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சேவைகளை வழங்குவதுடன் அவர்களின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அவர்களின் கட்டிடங்கள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் அவர்கள் எதிர்கொள்ளும் இயலளவு இடைவெளியை குறைப்பதற்கு உதவுகின்றது.

செயற்திட்ட பிரேரணைகள் (வாடிக்கையாள் செயற்திட்டங்களை அடையாளம் காண்பதற்கு உதவும் வகிபாகம்)

செயற்திட்டச் சுருக்கங்கள், சாத்தியக்கூறு அறிக்கைகள், கிரய மதிப்பீடுகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செயற்திட்ட அனுமதிகளையும் நிதி ஒதுக்கீடுகளையும் பெற்றுக் கொள்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை நாங்கள் தயார் செய்கின்றோம்.

ஆயத்த தயாரிப்பு (தொழில்முனைவு செயற்திட்ட முகாமை வகிபாகமாக இருத்தல்)

வடிவமைப்பிலிருந்து பூரணப்படுத்தி கையேற்றல் வரையிலுமான முழுப் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வாடிக்கையாளர் எல்லா தொழிற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான அனுமதியை மாத்திரம் வழங்குதல் வேண்டும். கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு வாக்குப் பணமாக அல்லது காசோலையாக நிதிகள் மாற்றப்படுவதன் மூலம்: நிதிப்பிரமாணத்தில் கூறப்பட்டவாறு நிதிகள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

ஆலோசனை (செயற்திட்ட அமுலாக்கல் முகாமையாளரின் வகிபாகம்)

நாங்கள் சாத்தியக்கூறு ஆய்வு, வடிவமைப்பு அபிவிருத்தி, அளவுத்திட்ட சிட்டைகள் மற்றும் கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் போன்ற ஒப்பந்தத்திற்கு முன்னைய பொறுப்புக்களையும், கட்டுமான முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் போன்ற ஒப்பந்தத்திற்குப் பிந்திய பொறுப்புக்களையும் நாங்கள் மேற்கொள்கிறோம். கேள்விப்பத்திர செயல்முறை பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வர்.
வாடிக்கையாளரிடம் நிதி தக்கவைக்கப்பட்டு, வாடிக்கையாளர் கட்டுமானப் பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவர்.

செயற்திட்ட முகாமைத்துவம் (செயற்திட்ட அமுல்படுத்துனராக / முகாமையாளராக இருத்தல்)

ஆலோசனை வழங்குகின்ற மற்றும் நிர்மாணித்தலில் ஈடுபடுகின்ற முகவர்களை நிர்வகிக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வாடிக்கையாளருக்கு ஆலோசனை வழங்குவதனை அல்லது அமுலாக்கலை நாங்கள் மேற்கொள்வோம். நாங்கள் தனியார் துறை முதலீட்டுத் திட்டங்களான BOT, BOOT, வடிவமைத்தல் மற்றும் அரசாங்க அல்லது மானியம் வழங்கும் முகவர் மூலமான ஒப்பந்தங்களை கையேற்கின்றோம்.
வாடிக்கையாளரிடம் நிதி தக்கவைக்கப்பட்டு, வாடிக்கையாளர் கட்டுமானப் பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவர்.

பராமரிப்பு, சிறப்பு பழுதுபார்ப்பு, மேம்பாடுகள்(வாடிக்கையாளருக்கு வசதியளித்தல் வகிபாகமாக காணப்படும்)

நிபந்தனை அறிக்கைகள், பராமரிப்பு கையேடுகள், பராமரிப்பு மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் பராமரிப்பு செயல்படுத்தல்கள், கட்டிட மறுசீரமைப்புகள், உள்கட்டமைப்பு ஆகியவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.
பணிகளை மேற்கொள்வதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு நிதி விடுவிக்கப்படும்

வழங்கப்பட்ட ஏனைய சேவைகள்

திறமையான அதிகாரிகளை உறுப்பினர்களாக நியமிப்பதன் மூலம் ஏனைய நிறுவனங்களின் கொள்வனவுக் குழுக்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், துணைக் குழுக்கள் மற்றும் பிற தொடர்புடைய குழுக்களில் நாங்கள் பங்கேற்கின்றோம்.

பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை

தேசிய அபிவிருத்திக்கு பங்களித்தல்

இந்தத் திணைக்களமானது கட்டிடத் துறையில் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. நாடளாவிய நிர்மாணத் திட்டங்களுக்கு அதிகளவு செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை திணைக்களத்தினால் வழங்க முடிந்திருந்தது.

9001:2015 நிலையைப் பெறுதல்

தலைமை அலுவலகம் மற்றும் தலைமைப் பொறியாளர் அலுவலகம் (கட்டிடங்கள் திணைக்களத்தின் வலயம் 5 ISO 9001:2008 நிலை மற்றும் ISO 9001:2015 க்கான மீள் சான்றிதழ்படுத்தலை செயல்படுத்துகிறது).
ஏனைய வலய அலுவலகங்களும் ISO அந்தஸ்தைப் பெறுவதற்கான உரிய ஆவணங்களைத் தயாரித்து வருகின்றன.


2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் மீதமுள்ள வலய அலுவலர்களுக்கு ISO சான்றிதழ் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செயல் முன்னேற்றப் பொழிப்பு

2021 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட மதிப்பீட்டுக்கு எதிரான நிதி செயல் முன்னேற்றத்தின் ஒட்டுமொத்த சதவீதம் 70.1% ஆகும்

2021 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட தடைகள்

- பணியாளர்கள் பற்றாக்குறை
    - பொறியியலாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள்
    - தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் வரைவு நபர்கள்
    - தொழில்நுட்ப உதவியாளர்
    - பொது முகாமைத்துவ உதவியாளர்கள்
    - சாரதிகள்
- வசதிகள் மற்றும் சலுகைகள் இல்லாததால் அரசுத் துறையில் அதிகாரிகளைத் தக்கவைப்பதில் சிரமம்
- தளத்தைப் பார்வையிடுவதற்கு வாகனங்கள் பற்றாக்குறை.
- அவசர திட்டங்களுக்கு பணி நியமனத்தின் அடிப்படையில் ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்கு ஒப்புதல்கள் இல்லாமை.
- சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு / மேம்பாட்டிற்கு போதுமான ஒதுக்கீடுகள் இல்லாமை.
- இடைநிறுத்தப்பட்ட திட்டங்களுக்கு பணம் செலுத்தாமை (வடிவமைப்புகளை முடித்த பிறகு)
- கட்டுமான கட்டத்தில் வாடிக்கையாளர்களால் கோரப்பட்ட மாற்றங்களால் திட்டங்களில் தாமதம்.
- ஒப்பந்ததாரர்களின் வளங்கள் பற்றாக்குறை மற்றும் நிதி மற்றும் பொருள் பற்றாக்குறை காரணமாக திட்டங்களை சரியான நேரத்தில் முடிப்பதில் சிரமம்.
- வாடிக்கையாளரால் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் மற்றும் உள்ளூர் அரசாங்க அனுமதிகளைப் பெறுவதில் தாமதம்



பொறியியலாளர்: எம்.எச்.எம். இஸ்மாயில்
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்

1.3 பிரதான செயற்பாடுகள்


திணைக்களமானது நிதிப்பிரமாணங்கள் 787, 788, 789 மற்றும் 790 ஆகியவற்றின் கீழ் அதிகாரம் பெற்றுள்ளது. அதன்படி, திணைக்களமானது தொழில்நுட்பம் அல்லாத துறைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பின்வரும் பொறுப்புகளை கையேற்கின்றது.

திணைக்களமானது எமது அர்ப்பணிப்பிற்கு மிகவும் கட்டுப்படும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்த வடிவில் உடன்படிக்கையுடன் சேவைகளை வழங்குகிறது.


திணைக்களத்தின் பிரதான செயல்பாடுகள் பின்வருமாறு

1. அரசாங்க அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் முகவர் நிலையங்களின் வாக்குப்பணப் பேரேட்டுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் கட்டிடங்கள் மற்றும் தொடர்புடைய வசதிகளின் திட்டமிடல், வடிவமைப்பு, மதிப்பீடு மற்றும் நிர்மாணம்.
2. கட்டிட வேலைகளில் பிராந்திய நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்.
3. அரசு கட்டிடங்களில் பராமரிப்பு, சேர்த்தல் மற்றும் மேம்பாடு
4. அரசு மருத்துவமனைகளின் கழிவுநீர் சாக்கடைத் திட்டங்களைப் பராமரித்தல் மற்றும் செயல்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
5. அரசு குடியிருப்புகள் மற்றும் விடுதிகளில் சேர்த்தல், மேம்படுத்துதல், பராமரித்தல்.
6. திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து கட்டிட வேலைகளுக்கும் தொழில்நுட்ப பொறுப்புணர்வை உறுதி செய்தல் .
7. வெளிநாட்டு பணி திட்டங்கள்.
8. 2018.05.28 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு உரிமைச் சட்டத்தின் (சிறப்பு விதிகள்) படி புலமைச் சொத்துக் கட்டிடங்களுக்கான சான்றிதழ் வழங்குதல்
9. ஏனைய நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
10. பிற தொழில்நுட்ப நிறுவனங்களின் இளங்கலை மற்றும் மாணவர்களுக்கு உள்ளக பயிற்சி வசதிகளை வழங்குதல்.
11. கட்டுமானம் மற்றும் கட்டிட பராமரிப்பு வீதப் பட்டோலைகளைத் (BSR) தயாரித்தல் மற்றும் புதுப்பித்தல்
12. UDA இன் பொது ஒழுங்குமுறையின்படி கட்டிட நிலை அறிக்கைச் சான்றிதழை வழங்குதல்.

1.4 நிறுவன அமைப்பு வரைபடம்



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்கள்




உரு 2: வலயப் பிரிவுகளின் வரைபடம்

1.6 அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபையின் கீழ் வரும் நிறுவனங்கள்/நிதிகள்

- பொருத்தமற்றது -


அத்தியாயம் 02 - செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 கடந்த செயலாற்றல் 2021 வரை



	Jan	Feb	March	April	May	June	July	Aug	Sep	Oct	Nov	Dec
2021 Target	561.1	1094.4	1526.88	1079.87	2378.637	2736.049	3106.797	3161.43	3731.04	2510.46	3239.41	4116.65
2021 Progress	210.79	420.6	600.9	748.67	855.06	1027.11	1214.78	1413.54	1603.91	1940.72	2287.5	2911.67

உரு 3 : நிர்மாணச் செயலாற்றலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுதல்.




	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
Rehabilitation	142.09	158.08	344.80	363.13	603.43	502.77	446.62	283.49	278.61	493.71
New Buildings	479.03	1181.14	1178.21	1940.68	3313.95	4759.63	4886.74	4527.99	1672.08	2417.96
Total	621.12	1339.22	1523.01	2303.81	3917.38	5262.40	5333.36	4811.48	1950.69	2911.67

உரு 4 : கடந்த பத்து ஆண்டுகளுடன் ஒப்பிடுதல்

இத்திணைக்களமானது அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிற்கு சேவைகளை வழங்குகின்றது. திணைக்களம் வழங்கும் பிரதான சேவைகளை புதிய கட்டிடங்கள், உட்கட்டமைப்பு கட்டுமானங்கள் மற்றும் மறுசீரமைப்புகள் என வகைப்படுத்தலாம். அட்டவணை 1 மற்றும் உரு 4 இல் காட்டப்பட்டுள்ளபடி, திணைக்களம் அதன் செயலாற்றலை 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 621.12 மில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,911.67 மில்லியனாக அதிகரித்துள்ளமையால், 2012 முதல் 2021 வரை செயலாற்றலானது 369% அதிகரித்துள்ளது. கொவிட் 19 நோய்த்தொற்று காலத்தில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்த போதிலும், செய்யப்பட்ட வேலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1 : 2012-2021 ஆண்டிலிருந்து வருடாந்த அதிகரிப்பு

ஆண்டு	வருடாந்த செயலாற்றல் (மில்லியன்)	அதிகரிப்பு சதவீதம் (2012 இன் அடிப்படை)	அதிகரிப்பு சதவீதம் (முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு)
2012	621.12		
2013	1339.22	116%	116%
2014	1523.01	145%	14%
2015	2303.81	271%	51%
2016	3917.38	531%	70%
2017	5262.40	747%	34%
2018	5333.35	759%	1%
2019	4811.48	675%	-10%
2020	1950.69	214%	-59%
2021	2911.67	369%	49%



உரு 5 : செயலாற்றல் அதிகரிப்பு

2020 முதல் 2021 வரையிலான காலத்தில் திணைக்களமானது, அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளபடி, அதன் செயலாற்றலை ரூபா 1950.69 மில்லியனில் இருந்து ரூபா 2911.67 மில்லியனாக அதிகரித்துள்ளது. கீழே உள்ள அட்டவணை 2புனரமைப்பு மற்றும் புதிய கட்டிடங்களின் செயலாற்றலைக் காட்டுகின்றது. 2020 முதல் 2021 வரை புதிய கட்டிடங்களின் செயலாற்றல் 45% இனாலும் புனரமைப்பு திட்டங்களின் செயலாற்றல் 77% இனாலும் அதிகரித்துள்ளது.

அட்டவணை 2 : துறைசார் வருடாந்த செயலாற்றல் ஒப்பீடு

துறை	வருடாந்த செயலாற்றல் (மில்.)		% அதிகரிப்பு (முன்னைய ஆண்டின் அடிப்படையில்)
	2020	2021	
புனரமைப்பு	278.61	493.71	77%
புதிய கட்டிடங்கள்	1672.08	2417.96	45%
மொத்தம்	**1950.69**	**2911.67**	**49%**

2.2 2021 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டங்களின் சுருக்கம்

திணைக்களம் 2021 ஆம் ஆண்டில் 267 செயற்திட்டங்களைக் கையாண்டதுடன் அவற்றில் 199 செயற்திட்டங்கள் ரூபா 25 மில்லியன் வரையிலான பெறுமதியைக் கொண்டவையாகவும் 39 செயற்திட்டங்கள் ரூபா 25 மில்லியன் முதல் ரூபா 100 மில்லியன் வரையிலான பெறுமதியைக் கொண்டவையாகவும் காணப்பட்டன. அத்துடன் 14 செயற்திட்டங்கள் ரூபா 100 மில்லியன் முதல் ரூபா 200 மில்லியன் வரையிலான பெறுமதியைக் கொண்டவையாகவும் 15 செயற்திட்டங்கள் ரூபா 200 மில்லியனுக்கும் அதிக பெறுமதியைக் கொண்டவையாகவும் காணப்பட்டன. விபரங்கள் அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 3 : 2021 ஆம் ஆண்டில் கட்டுமானப் பிரிவு செயற்திட்டங்களின் சுருக்கம்


வலய அலுவலகம்	**செயற்திட்ட பெறுமதி ரூபா (மில்.)**				
	0-25	**25-100**	**100-200**	**>200**	**மொத்தம்**
வலயம் - மேற்கு – தெற்கு	**28**	**04**	**04**	**01**	**37**
வலயம் மேற்கு – வடக்கு	**16**	**04**	**02**	**06**	**28**
வலயம் 2	**16**	**07**	**-**	**02**	**25**
வலயம் 3	**30**	**05**	**-**	**02**	**37**
வலயம் 4	**50**	**06**	**02**	**01**	**59**
வலயம் 5	**21**	**03**	**05**	**01**	**30**
வலயம் 6	**38**	**10**	**01**	**02**	**51**
மொத்தம்	**199**	**39**	**14**	**15**	**267**

2.3 ஆலோசனைப் பிரிவின் செயலாற்றல்

ஆலோசனை பிரிவு என்பது திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளின் மையமாகும். கட்டிடங்கள், தொடர்புடைய உட்கட்டமைப்புகள் மற்றும் அளவுத்திட்ட பட்டியல்கள் தொடர்பான கட்டிடக்கலை, கட்டமைப்பு, மின்சாரம், நீர் வழங்கல், வடிகால் மற்றும் இயந்திர வடிவமைப்பு போன்ற வடிவங்களில் வடிவமைப்புச் சேவைகளை இந்த பிரிவு வழங்குகின்றது. மேலே உள்ள சேவைகள் அர்ப்பணிப்புள்ள தொழில்முறை கட்டிடக் கலைஞர்கள் மற்றும் பொறியியலாளர்களால் வழங்கப்படுகின்றன. இந்தப்பிரிவு 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 7,746 மில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 7,688.37 மில்லியனாக அதன் செயலாற்றலை மேம்படுத்தியுள்ளது. 2021 இல் காணப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணை 4 காட்டுவதுடன் 2013 முதல் 2021 ஆண்டு வரையிலான செயலாற்றலை உரு 6 காட்டுகின்றது.

அட்டவணை 4 : 2021 இல் ஆலோசனைப் பிரிவின் செயற்திட்ட சுருக்கம்

இல.	விபரம்	செயற்திட்ட எண்ணிக்கை
1	வடிவமைப்பு கட்டத்தில் முடிக்கப்பட்ட செற்திட்டங்கள்	40
2	வாடிக்கையாளர் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட ஸ்கெட்ச் வடிவமைப்புகள்	85
3	நிர்மாண வரைபட கட்டத்திலுள்ள செயற்திட்டங்கள்	15
4	2021 ஆம் ஆண்டின் இறுதியில் தயார் நிலையில் உள்ள ஸ்கெட்ச் வடிவமைப்புகள்	07
5	2021 ஆம் ஆண்டின் இறுதியில் விசாரணை நிலையில் உள்ள செயற்திட்டங்கள்	23
	மொத்த செயற்திட்டங்கள்	**170**



உரு 6 : ஆலோசனைப் பிரிவு செயலாற்றலின் வரைபடரீதியான பிரதிநிதித்துவம்

2.4 புலமைச்சொத்து செயற்திட்டங்களின் சான்றிதழ்

2018.05.25 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுக்குமாடி உரிமைச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) படி, புலமைச் சொத்துக் குடியிருப்பு பாதுகாப்பிற்கான கட்டிடச் சான்றிதழை வழங்குவதற்காக வீட்டு அலகுகளை திணைக்களம் ஆய்வு செய்தது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் (NHDA) நிர்மாணிக்கப்பட்ட மொத்தம் 2045 வீடுகளில் 224 வீடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு 677 வீடுகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளபடி முறையே இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (SLLRDC) மற்றும் கண்டி மாநகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள 144 வீட்டு அலகுகளில் 32 அலகுகளில் பரிசோதிக்கப்பட்டது. வளவுகளிற்கு நுழைய முடியாமை, பதவியணியினரின் நாளாந்த வேலைகள் காரணமாக அவர்களை பணிக்கமர்த்த முடியாமை மற்றும் திணைக்களத்தில் காணப்பட்ட நிரந்தர பதவியணியினர் பற்றாக்குறை என்பன காரணமாக ஆய்வுகள் தாமதமடைந்தன.

அட்டவணை 5: புலமைச்சொத்து செயற்திட்டங்கள்

	NHDA	SLLRDC	மாநகர சபை - கண்டி
சான்றிதழ் வழங்கப்பட்டவை	677		
ஆய்வுக்கு உட்பட்டவை	224		
ஆய்வு செய்யப்பட்டவை	1144	144	32
மொத்த அலகுகள்	2045	144	32

அத்தியாயம் 03 - 2021 திசெம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றல்

3.1 நிதிச் செயலாற்றல் கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	வருமானப் பெறுகைகள்				
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,617,444,000	1,494,058,327	ஏசீஏ-3
-	வைப்புகள்		1,145,164,003	783,592,650	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		22,721,000	17,653,470	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		2,785,329,003	2,295,304,447	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		2,785,329,003	2,295,304,447	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	211,613	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		2,785,329,003	2,295,092,834	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்				
371,982,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	340,970,809	335,272,894	
114,463,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	116,580,991	96,992,609	ஏசீஏ-2(ii)
2,700,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,977,231	2,199,210	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
305,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	128,103	29,700	
489,450,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		459,657,134	434,494,413	
	மூலதனம் செலவினம்				
34,550,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	32,517,501	5,636,706	
60,100,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	55,943,634	3,689,159	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
2,700,000	திறன் விருத்தி	14	3,178,662	577,500	
1,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	153,155	
98,850,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		91,639,796	10,056,520	
	வைப்புக் கொடுப்பனவுகள்		818,685,319	932,401,343	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		17,638,145	16,090,841	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		836,323,464	948,492,184	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		1,387,620,394	1,393,043,117	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		1,397,708,609	902,049,717	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		1,397,708,609	902,049,717	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

1

3.2 நிதி நிலைமை கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	826,783,739	770,828,932
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	65,519,877	70,602,732
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**892,303,616**	**841,431,664**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(1,257,627,647)	(941,924,396)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		810,991,575	770,828,932
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	1,338,939,687	1,012,527,128
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**892,303,616**	**841,431,664**

பக்க இலக்கம் ..01.. முதல் ..52.. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் ..53.. முதல் ..57.. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 25-02-2022	திகதி : 25.02.2022	திகதி : 22/02/2022
Eng. Keerthi Ranjith Abeysiriwardena Secretary State Ministry of Rural Housing and Construction & Building Material Industries Promotion 2nd Floor, "Sethsiripaya" Battaramulla	Eng. M.H.M. Ismail Director General of Buildings Department of Buildings "Sethsiripaya" Battaramulla.	G.V. Anusha Sajeewani Chief Accountant Department of Buildings "Sethsiripaya" Battaramulla.

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை 2,021 ரூபா	திருத்தப்பட்ட 2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	121,967,518	73,892,568
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,617,444,000	1,494,058,327
முற்பணங்களை அறவிடல்	22,065,205	16,018,825
வைப்புக்களின் பெறுகை	1,145,164,003	783,592,650
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,906,640,726**	**2,367,562,370**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	457,595,083	431,911,438
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	1,977,231	2,199,210
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,519,095,152	975,233,920
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	211,613
முற்பணக் கொடுப்பனவு	17,648,145	15,548,326
வைப்புக் கொடுப்பனவு	818,685,319	932,401,343
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**2,815,000,930**	**2,357,505,850**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**91,639,796**	**10,056,520**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	91,639,796	10,056,520
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**91,639,796**	**10,056,520**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(91,639,796)**	**(10,056,520)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஒ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு உரிய மாதிரிகள் மற்றும் பின்னிணைப்புகளின் விபரம்

சே: இல்லை	வடிவமைப்பு எண்	வடிவத்தின் பெயர்	தொடர்புடையது	பொருத்தமற்றது	கருத்துக்கள்
1	ஏசீஏ - 1	2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று		√	
2	ஏசீஏ - 1(i)	2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமான நிலுவைக் கூற்று		√	
3	ஏசீஏ - 1(ii)	ஆரம்ப வருமான மதிப்பீட்டுக்கும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுக்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான விளக்கம்		√	
4	ஏசீஏ - 1(iii)	திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுக்கும் உண்மை வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான விளக்கம்		√	
5	ஏசீஏ - 2	2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்	√		
6	ஏசீஏ - 2(ஏ)	2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம் (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு மாத்திரம்)		√	
7	ஏசீஏ - 2(ஏ)(i)	ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் ஏனைய செலவினத் தலைப்புகளுக்கு மீண்டுவரும் செலவினத்திற்காக மேலதிக ஏற்பாடுகளை விடுவிப்பதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் வரவு செலவு உதவிச் சேவை மற்றும் அவசரத் தேவைப் பொறுப்பு செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தேறிய ஏற்பாடுகள் மற்றும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குதல் (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு மாத்திரம்)		√	
8	ஏசீஏ - 2(ஏ)(ii)	வருடத்தினுள் ஏனைய செலவினத் தலைப்புகளுக்கு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் வரவு செலவு உதவிச் சேவை மற்றும் அவசர தேவைப் பொறுப்பு செலவு விடயத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட ஏற்பாடுகள் - மீண்டுவரும் செலவுகள்.(தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு மாத்திரம்)		√	
9	ஏசீஏ - 2(ஏ)(iii)	ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் ஏனைய செலவினத் தலைப்புகளுக்கு மூலதனச் செலவினத்திற்காக மேலதிக ஏற்பாடுகளை விடுவிப்பதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் வரவு செலவு உதவிச் சேவை மற்றும் அவசரத் தேவைப் பொறுப்பு செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தேறிய ஏற்பாடுகள் மற்றும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குதல் (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு மாத்திரம்)		√	

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடல் அடிப்படை

1. **அறிக்கையிடல் காலப்பகுதி**
இந்த நிதிக்கூற்றுக்களிற்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் நிதி ஆண்டாகும்.

2. **அளவிடலுக்கான அடிப்படை**
இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயங்கள் மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிகளிற்கு சீராக்கப்பட்டுள்ளன. வேறுவகையில் குறிப்பிடப்படாதவிடத்து கணக்குகள் மேம்படுத்திய காசு முறையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய தொகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3. **வருமானங்களை இனங்காணல்**
கைமாறுகின்ற மற்றும் கைமாற்றமற்ற வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலஎல்லை கருத்திலெடுக்கப்படாது, காசு கிடைக்கும் காலத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

4. **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்கண்டு அளவிடுதல்**
சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதியாக காணப்பட்டு, அச்சொத்துக்களை நம்பகரமாக அளவிடக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காணப்படுகின்றன.
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுவதுடன் கிரய வடிவம் சம்பந்தப்படாதிருக்கும் சந்தர்ப்பங்களில் மீள விலைமதிக்கப்பட்ட பெறுமதிகள் பிரயோகிக்கப்படுகின்றன.

5. **ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம்**
இந்த ஒதுக்கக் கணக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒப்பீட்டுக் கணக்காகும்.

6. **காசும் காசுக்கு சமமானவைகளும்**
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டில் புழக்கத்திலுள்ள பண நோட்டுக்களும் குற்றி நாணயங்களும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் உள்ளடங்கியுள்ளன.

3.5 வருவாய் சேகரிப்பின் செயலாற்றல்

ரூபா.....

வருமான குறியீடு	வருமான குறியீட்டு விபரம்	வருவாய் மதிப்பீடு		வசூலித்த வருவாய்	
		அசல்	இறுதி	தொகை (ரூ.)	இறுதி வருவாய் மதிப்பீட்டின் % ஆக
	பொருந்தாது				

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றல்

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவு	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டின் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி		
மீண்டுவரும்	489,450,000.00	489,450,000.00	459,657,134.00	94
மூலதனம்	98,850,000.00	98,850,000.00	91,639,796.08	93

3.6அ நி.பி. 208 இன் அடிப்படையில் இந்த திணைக்களம்/மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கு ஏனைய அமைச்சகங்கள்/திணைக்களங்களின் முகவராகச் செலவழிப்பதற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தொடர் இல.	ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம்	ஒதுக்கீடு		உள்ளபடியான செலவினம்	ஒதுக்கீட்டின் சதவீதமாக நிதிகளின் பயன்பாடு
103	பாதுகாப்பு அமைச்சு	3,700,000.00	3,700,000.00	1,531,384.38	41
111	சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு	234,140,599.70	234,140,599.70	169,128,151.70	72
112	வெளிநாட்டு விவகார அமைச்சு	975,494.70	975,494.70	931,190.71	95
160	சுற்றாடல் அமைச்சு	264,000.00	264,000.00	226,966.16	86
186	தொழில்நுட்ப அமைச்சு	50,000,000.00	50,000,000.00	50,000,000.00	100
216	சமூக சேவைகள் அமைச்சு	59,000,000.00	59,000,000.00	43,999,999.99	75
220	ஆயுர்வேத அமைச்சு	78,177,308.51.00	781,77,308.51	49,516,600.89	84
221	தொழில் அமைச்சு	345,483,801.90	345,483,801.90	240,674,189.53	70
225	பொலிஸ் திணைக்களம்	635,267,632.20	635267632.20	556,961,813.60	88
236	அரசகரும மொழிகள் திணைக்களம்	4,425,000.00	4,425,000.00	4,069,202.30	92
246	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	50,531,000.00	50,531,000.00	24,537,188.45	49
248	மதுவரித் திணைக்களம்	66,460,669.73	66,460,669.73	38,735,009.37	58
288	நிலஅளைவை நாயகத் திணைக்களம்	7,931,523.60	7,931,523.60	7,931,523.60	100
289	விவசாய ஏற்றுமதி திணைக்களம்	4,500,000.00	4,500,000.00	4,500,000.00	100
308	தபால் திணைக்களம்	25,000,000.00	25,000,000.00	1,749,942.88	7
401	தேசிய மரபுரிமை, அரங்காட்டற்கலை மற்றும் கிராமிய கலைகள் இராஜாங்க அமைச்சு	31,065,824.28	31,065,824.28	14,062,283.20	45
412	வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி மற்றும் சந்தை பல்லினப்படுத்தல் இராஜாங்க அமைச்சு	175,000.00	175,000.00	144,478.38	83
415	கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு	21,588,360.08	21,588,360.08	9,759,284.42	45
418	சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு	169,600,000.00	169,600,000.00	169,600,000.00	100
420	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் இராஜாங்க அமைச்சு	100,000,000.00	100,000,000.00	100,000,000.00	100
431	தெங்கு, கித்துள் மற்றும் பனை உற்பத்தி மேம்பாட்டு மற்றும் தொடர்புடைய கைத்தொழில் பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்லினப்படுத்தல் இராஜாங்க அமைச்சு	52,999,000.00	52,999,000.00	29,495,444.50	56

3.7 நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையிடல் செயலாற்றல்

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	2021.12.31 இன் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின்படி மீதி	2021.12.31 இன் நிதி நிலைமைக் கூற்றின் படி மீதி	இதுவரை கணக்கீடு செய்யப்படாதவை	அறிக்கையிடப்பட்டவைகளின் செயல் முன்னேற்ற சதவீதம்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	103,168,184.24	103,168,184.24	-	100
9152	இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	249,091,293.73	249,091,293.73	-	100
9153	காணிகள்	461,740,918.17	461,740,918.17	-	100
9154	அருவச் சொத்துக்கள்	3,979,368.00	3,979,368.00	-	100
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	100
9160	நடைபெற்றுவரும் வேலை	8,803,975.05	8,803,975.05	-	100
9180	குத்தகை சொத்துக்கள்	-	-	-	100

3.8 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

சீஈஏ/ஏ/பீடீ/எ.ஃப்எஸ்/2021/01 2022 மே ஆம் திகதி

செயலாளர்
கிராமிய வீடமைப்பு, நிர்மாண மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

கட்டிடத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டிடத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கட்டிடத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.
இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவாகவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு எண்ணவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிடுகின்றேன்.
(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்யப்படக் கூடியவை,

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

முற்பணக் கணக்கு மீதிகள்

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த 30901 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் திணைக்களத்தினால் பின்பற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இல.	செலவினம்		பெறுவனவு		வரவு மீதி	
	,கக்கூடிய எல்லை	ள்ளபடியான	கக்குறைந்த எல்லை	ள்ளபடியான	,கக்கூடிய எல்லை	ள்ளபடியான

----------	----------	----------	----------	----------	----------
ரூபா	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**
7,000,000	5,930,635	5,000,000	0,347,695	,000,000	6,185,672

(ஆ) முற்பணக் கணக்கு நடவடிக்கை தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

(i) தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கீழ் ஏனைய தலைப்பு தொடர்பாக காணப்படுகின்ற ரூபா 202,760 இடர் கடன் மீதியானது இலங்கை மதுவரி திணைக்களத்தின் மதுவரி கட்டுப்பாட்டு சாரதி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் கடன் மீதியாவதுடன் 2021 திசெம்பர் 31 வரையிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேறிய சொத்துக்கள் / உரிமைத்துவத்தின் கீழ் ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கமாக எஸ்.ஏ -6 இல் ரூபா 810,991,575 தொகை குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், அத்தொகை ரூபா 15,792,164 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) தேறிய சொத்துக்கள் / உரிமைத்துவத்தின் கீழுள்ள வைப்புக் கணக்கின் (எஸ்.ஏ -4) மீதியிலிருந்து முற்பணக் கணக்கு மீதி (எஸ்.ஏ -5ஏ) கழிக்கப்பட்டு திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள் காண்பிக்கப்பட வேண்டியதுடன், அத்தொகை ரூபா 1,273,419,810 ஆன போதிலும் ரூபா 1,257,627,647 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 15,792,163 வேறுபாடு காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கட்டிடத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டுமென்பதுடன், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2.3	**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு**	**இணக்கமின்மை**
	----------	----------
	2017.06.28 ஆந் திகதிய MF/CG/02/(iv) ஆம் இலக்க 01/2017 சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் படி சொத்துக்கள் மற்றும் கிரயங்களின் முகாமைத்துவத்தின் பொருட்டு அரசாங்கத்தின் அனைத்து நிதிசாரா சொத்துக்களையும் பதிவுசெய்வதற்காக கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்களிடையே பின்னிணைப்பு III இலுள்ள பொறிகள் மற்றும் இயந்திரங்கள், IV நிர்மாணங்கள் பற்றிய தகவல்கள், VI இலுள்ள காணிகள் பற்றிய தகவல்கள், VII இலுள்ள அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியன தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வைப்புக்கள் கணக்கு

மூன்றும் தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையாக பராமரிக்கப்பட்டு வருகின்ற 13/52 ஆம் இலக்க பொது வைப்புக்கள் கணக்கின் மீதியான ரூபா 999,033,372 தொகையில் பொதுப் பேரேட்டு மீதிகள் மற்றும் வாக்குப்பணப் பேரேட்டு மீதிகள் ஆகிய இரண்டு மீதிகளும் உள்ளடங்கியுள்ளன. இதிலுள்ள வாக்குப்பணப்

பேரேட்டு மீதியான ரூபா 697,745,731 தொகையில் திணைக்களத்தினால் செய்து முடிப்பதற்கு பொறுப்பேற்கப்பட்ட பணிகள் தொடர்பாக கிடைப்பதற்குள்ள தொகையிலிருந்து இன்னும் செய்து முடிக்காத வேலைகளிற்கான தொகை காண்பிக்கப்படுவதுடன் பொதுப் பேரேட்டு மீதியான ரூபா 301,287,641 தொகையில் குறித்த பணிகள் முடிவடைந்த பின்னர் எஞ்சியுள்ள தொகையும் வேலைகளிற்காக அறவிடப்பட்ட முகாமைத்துவக் கட்டணமும் உள்ளடங்கியுள்ளன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) உறுதிப்பட இனங்காண முடியுமாகவுள்ள 2020, 2021 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்டுள்ள முகாமைத்துவக் கட்டணமான ரூபா 1,150,270 தொகை அந்தந்த ஆண்டுகளில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது இரண்டு ஆண்டுகள் வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்

(அ) நிதிப்பிரமாணம் 789 இன் பிரகாரம் அரசாங்கத்தின் அனைத்து நிர்மாணங்கள் மற்றும் வேலைகளை செயற்படுத்துதல் தொடர்பில் திணைக்களத்திற்கு (கட்டிடத் திணைக்களம்) பொறுப்புக் காணப்படுகின்றது என்பது பொதுவான விதியாகும்.

மேற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் ஏனைய நிர்மாண பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்திடம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிட நிர்மாண துறைசார்ந்த பின்வரும் பதவியணியினர் காணப்பட்டனர்.

சிரேஷ்ட தரத்திலுள்ள பொறியிலாளர்கள்	79
சிரேஷ்ட தரத்திலுள்ள கட்டிடவியலாளர்கள்	12
மூன்றாம் தரத்திலுள்ள வடிவமைப்பாளர்கள்	06
இரண்டாம் தரத்திலுள்ள உதவி அளவுத்திட்ட வியலாளர்கள்	13
இரண்டாம் தரத்திலுள்ள வடிவமைப்பாளர்கள்	28
இரண்டாம் தரத்திலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	75

(ஆ) அவ்வாறு காணப்பட்ட போதிலும், அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களால் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு முன்னைய ஆண்டுகளில் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 846 மில்லியனுக்கும் மேற்பட்ட 37 நிர்மாண ஒப்பந்தங்கள் பூரணப்படுத்தப்படாது இடைநடுவே கைவிடப்பட்டிருந்தன.

(இ) நிதிப்பிரமாணத்தினை பின்பற்றி அரசாங்க நிறுவனம் என்ற வகையில் கட்டிடத் திணைக்களத்தின் மீது நம்பிக்கை வைத்து ஏனைய அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களால் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு நிர்மாண வேலைகள் ஒப்படைக்கப்படுவதுடன், இது தொடர்பில் கட்டிடத் திணைக்களம் முகாமைத்துவக் கட்டணத்தையும் அறவிடுகின்றது.

இருப்பினும், இவ்வாறு நிர்மாண வேலைகள் இடைநடுவே கைவிடப்பட்டிருந்த போதிலும், இதற்கான காரணமாக உப ஒப்பந்த காரர்களை மாத்திரம் குற்றம் சுமத்துவதன் மூலம் அரசாங்க நிறுவனம் என்ற வகையில் கட்டிடத் திணைக்களத்திற்கு காணப்படுகின்ற பொறுப்பிலிருந்து விடுபட முடியாது என்பதுடன் இந்த வேலைகள் உரியவாறு நிறைவேற்றப்படாமையால் அரசாங்க நிறுவனங்கள் பின்னடைவை சந்திக்கின்ற அதேவேளை அந்த ஒப்பந்த வேலைகளிற்காக செலவிடப்பட்டிருந்த தொகையிலிருந்து எவ்விதப் பயனும் கிடைக்காதுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

3.1.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

(அ) 2021 ஆம் ஆண்டில் வடிவமைத்து நிர்மாணிக்கின்ற (Turnkey) 119 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 14 செயற்திட்டங்கள் தொடர்பாக எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 302.1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த 24 செயற்திட்டங்களின் செயலாற்றுகை 5 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை மாத்திரம் காணப்பட்டது.

(ஆ) 2021 ஆம் ஆண்டின் போது 68 மதியுரை சேவை (Consultancy) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 07 செயற்திட்டங்கள் தொடர்பாக எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 528.1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த 09 செயற்திட்டங்களின் செயலாற்றுகை 5 சதவீதம் முதல் 47 சதவீதம் வரை மாத்திரம் காணப்பட்டது.

(இ) 2021 ஆம் ஆண்டின் போது 28 செயற்திட்ட முகாமைத்துவ (Project Management) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு செயற்திட்டம் தொடர்பாக எவ்வித செயலாற்றலும் காணப்படாதிருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 171.89 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த 06 செயற்திட்டங்களின் செயலாற்றுகை 10 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை மாத்திரம் காணப்பட்டது.

(ஈ) 2021 ஆம் ஆண்டின் போது 40 பராமரிப்புச் (Maintenance) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 06 செயற்திட்டங்கள் தொடர்பாக எவ்வித செயலாற்றலும் காணப்படாதிருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 10.56 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களின் செயலாற்றுகை 01 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை மாத்திரம் காணப்பட்டது.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிதி சாராத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளை பரிசோதித்த போது ரூபா 10,090 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2021 திசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபையால் இனங்காணப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவற்றின் விபரங்கள் வருமாறு.

- வலய இல. 06

தங்காலை பிரதேச அலுவலகம்

- $2000cm^2$ பதவிநிலை உத்தியோகத்தர் மேசை (மரம்) – 01 மற்றும் ஒரு 7500 - $5000cm^2$ எழுதுவினைஞர் மேசை (மரம்) ஆகியன புத்தகங்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் சுற்றுலா விடுதியில் பௌதீக ரீதியாக காணப்படாதுள்ளதுடன் அந்தப் பொருட்கள் இதற்கு முற்பட்ட கடந்த பல வருடங்களாக பற்றாக்குறையாக காணப்படுவதாக வழங்கப்பட்ட பதிலளிப்பின் படி உறுதியாவதுடன், அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ரத்மலான

களஞ்சியம்

- களஞ்சியத்திலுள்ள நிர்மாணங்களிற்குத் தேவையான சில பொருட்களை மாத்திரம் உபயோகித்து பொருள் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களில் எஞ்சிய பொருட்கள் உரிய முறையில் களஞ்சியத்திற்கு மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்திற்குச் சொந்தமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற கட்டிடங்களாக கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் தொடர்பான அறிக்கையிலுள்ள 6262.84 சதுரமீற்றர் விஸ்தீரணமுடைய 37 கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதிகள் காணப்படாதுள்ளதுடன், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கண்டியில் அமைந்துள்ள ஹந்தான எனும் இடத்திலுள்ள 02 உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் கடுகலே வத்த அலுவலகக் கட்டிடம் ஆகியவற்றின் விஸ்தீரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்காமையால் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடப் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஈ) திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள்

(i) திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையிலுள்ள 45 காணிகளில் 12 காணிகளிற்கு மாத்திரமே உறுதிகள் காணப்படுவதுடன், எஞ்சிய 33 காணிகளிற்கு உறுதிகள் காணப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள 45 காணிகளில் 19 காணிகளிற்கான (3 ஏக்கர் 12 ரூட் 437.82 பேர்ச் விஸ்தீரணமுடைய) மதிப்பீட்டுப் பெறுமதிகள் காணப்படாதுள்ளதுடன், அதிலுள்ள அருகம்பே இல் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணமும் காணப்படவில்லை. அதன்படி, திணைக்களத்திற்குரிய நிலையான சொத்துக்களின் கீழுள்ள காணியின் பெறுமதிகளது சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) தியதலாவ பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 01 ரூட் விஸ்தீணமுள்ள ரூபா 10,550,000 பெறுமதியான உத்தியோகபூர்வ விடுதி அமைந்துள்ள காணி, பிரதான பொறியியலாளர் (Kandy II) இனால் பதுளை பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், அக்காணி பதுளை பிரதேச செயலாளரினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்காமையால் அக்காணியில் மாவட்ட அலுவலகத்தை பேணிச் செல்வதற்காக அதனை திணைக்களத்திற்கு மீளக் கையளிக்குமாறு 2017.04.11 ஆந் திகதியிட்ட 12-06-64 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கண்டி பிரதான பொறியியலாளரால் காணிகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இதனுடன் தொடர்புடைய கோவைகளை பரிசோத்த போது இந்தக் கையளிப்புடன் சம்பந்தப்பட்ட தகவல்களை தேடிக் கண்டுபிக்க முடியாதிருந்ததுடன், அதன்போது அந்தக் காணிக்குப் பதிலாக மாற்றுக் காணியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு

கட்டிடங்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணிகளில் ஒன்றாக ''அரசாங்க கட்டிடங்களின் பராமரிப்பு, புதிதாக சேர்த்தல் மற்றும் மேம்படுத்தல்'' என்பது காணப்படுகின்ற போதிலும், திணைக்களத்திற்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற சுற்றுலா விடுதிகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) காலி சுற்றுலா விடுதி

- காலி சுற்றுலா விடுதியின் கூரையில் பொருத்தப்பட்டுள்ள மின் காற்றாடிகள் துருப்பிடித்து மிகவும் பழமைவாய்ந்து காணப்படுவதுடன் விடுதியின் முன்பாக இத்துப்போன மரமொன்று காணப்படுகின்ற போதிலும், அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கதிர்காமம் சுற்றுலா விடுதி

- குளியலறையின் கதவுகள் நனைந்து, துருப்பிடித்து குளியலறையின் உட்புறம் அழுக்காகவும் உள்ளது.
- சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ள இடங்கள் காணப்படுவதுடன் குளியலறையின் சுவர்களும் தரை ஓடுகளுடன் வெடித்து சிதறியுள்ளன.
- காவலாளிக்கு வழங்கப்பட்டுள்ள அறை சுற்றுலா விடுதியின் பின்புறம் அமைந்திருப்பதால் இரவில் பாதுகாப்புச் சிக்கல்கள் இருப்பதாக காவலாளர் கூறுகின்றார்.
- உடைந்த படுக்கைகள் மற்றும் தூசி நிறைந்த பழைய கொசு வலைகள் அறைகளில் காணப்படுகின்றன.
- குரங்குகள் மற்றும் வெளவால்கள் போன்ற விலங்குகள் மத்திய முற்றத்தின் திறந்த பகுதியிலிருந்து விடுதிக்குள் நுழைவதாக கூறப்பட்டது.

(iii) நுவரெலியா சுற்றுலா விடுதி

- சுற்றுலா விடுதியின் குளியலறையில் தண்ணீர் குழாய்கள் உடைந்து காணப்படுகின்றமை, குளியலறையில் உள்ள சுடுநீர் சூடாக்கிகள் சரியாக வேலை செய்யாது உள்ளமை, கட்டிடத்தில் புதுப்பிக்க வேண்டிய பகுதிகள் காணப்படுகின்றமை எனபன அவதானிக்கப்பட்டது.
- கழிவறைகளில் கழிவுநீர் தேங்கியுள்ளதால், சில அறைகளில் கடும் துர்நாற்றம் வீசுகின்றது.
- சுற்று விடுதியின் உட்புறமும் அதன் சுற்றுப்புறமும் முறையாக சுத்தம் செய்யப்படாததால், சுற்றுப்புறங்களில் களைகள் மடிந்து மிகவும் விரும்பத்தகாத சூழல் நிலவுகிறது.

- அறைகளில் உள்ள படுக்கைகள் மற்றும் தலையணைகள் மிகவும் பழமையானவையாகவும் பயன்படுத்த முடியாதவையாகவும் காணப்படுகின்றன.
- படுக்கை விரிப்புகள் குளிருக்காக பயன்படுத்தப்படுகின்ற போர்வைகள் ஒரு சோடி மட்டுமே காணப்படுகின்றமையால் தொடர்ச்சியான விடுதி முன்பதிவுகள் காணப்படுகையில் அவை துவைக்கப்படாமல் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுவதுடன் அவற்றை துவைக்க சரியான முறைகளும் காணப்படவில்லை.

(iv) நமுனுகுல சுற்றுலா விடுதிகள் 1 மற்றும் 2

- விடுதி இல. 1 இல் உள்ள அறை ஒன்றில் தண்ணீர் குழாய்கள் சரிவர செயற்படாததால், குளியலறையில் தேங்கும் தண்ணீர் சரியாக வெளியேறாமல், பெரும்பாலான நேரங்களில் குளியலறையில் தண்ணீர் தேங்கி, குளியலறைகள் அசுத்தமான நிலையில் உள்ளன.
- முன் மேற்கூரையில் உள்ள மேற்கூரை இடிந்து சிதைந்து வருகின்றது.
- சுற்றுலா விடுதியின் பின்புறம் உள்ள கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது.
- சுற்றுலா விடுதிக்கு நிரந்தர விடுதிக் காப்பாளர் காணப்படவில்லை.
- சுற்றுலா விடுதியின் வளாகம் களைகள் நிறைந்து காணப்படுவதுடன், சுத்தம் செய்யப்படாது பராமரிக்கப்படுகின்றமையால் மிகவும் விரும்பத்தகாத சூழல் நிலவுகிறது. அத்துடன் மழைநீர் வழிந்தோடும் குளாய்கள் அடைபட்டுக் காணப்படுகின்றன.
- படுக்கை விரிப்புகள் குளிருக்காக பயன்படுத்தப்படுகின்ற போர்வைகள் ஒரு சோடி மட்டுமே காணப்படுகின்றமையால் தொடர்ச்சியான விடுதி முன்பதிவுகள் காணப்படுகையில் அவை துவைக்கப்படாமல் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுவதுடன் அவற்றை துவைக்க சரியான வழிமுறைகளும் காணப்படவில்லை.

(v) ஹந்தான சுற்றுலா விடுதியின் சமையலறையில் உள்ள தரை ஓடுகள் கழன்றுள்ளதுடன் அறை 02 இல் உள்ள ஜன்னல் பழுதடைந்து பாதுகாப்பற்ற முறையில் காணப்படுவதனால் அறைக்குள் தண்ணீர் கசிந்து வருகிறது.

(vi) பண்டாரவளை சுற்றுலா விடுதியின் உட்கூரை பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

(vii) யாழ்ப்பாணம் சுற்றுலா விடுதி

- கமோட் சிஸ்டம் சரியாக வேலை செய்யாதிருப்பதுடன், கமோட் மூடிகள் உடைந்து, அறைகளில் போடப்பட்டுள்ள தரை ஓடுகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.
- கழிவறைகளில் உள்ள சலவை உபகரணங்கள் துருப்பிடித்து, முறையான வடிகால் அமைப்பு இல்லாததால் குளியலறைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது.
- தண்ணீர் தொட்டியில் நீர் கசிவு நீண்ட நேரம் நீடிப்பதால் அதிக அளவு தண்ணீர் வீணாகின்றது.

(viii) சுற்றுலா விடுதிகளில் தங்குகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் காலத்தின் போது ஏதேனும்

சேதம் ஏற்பட்டால், அதற்குரிய கட்டணம் மற்றும் பயன்படுத்தப்படும் தலையணை உறைகள் மற்றும் விரிப்புக்களை கழுவி சுத்தம் செய்வதற்கான கட்டணத்தை விடுதிப் பராமரிப்பாளரிடம் செலுத்தி, விடுதியை விட்டு வெளியேறும் முன் அதற்கான பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விடுதிப் பராமரிப்பாளர்கள், அத்தகைய பற்றுச்சீட்டுக்களை வழங்குவதில்லை என்பதுடன் அதற்குப் பதிலாக தாள் ஒன்றில் எழுதி வழங்கப்படுவதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், இந்த சுற்றுலா விடுதிகளை ஏனைய அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்குகையில் ஒரு அறைக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 1,500 முதல் ரூபா 2,000 வரை கட்டணம் வசூலிக்கின்றமையால், அடிப்படை வசதிகளையேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணுதல்

(அ) ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான நிகழ்ச்சி நிரல் 2030 உடன் இணங்கியொழுக வேண்டியது அவசியமாவதுடன், கட்டிடத் திணைக்களம் மீளாய்வாண்டிற்கான அதன் எல்லைக்குட்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் செயற்பட்டிருந்தமை எதிர்பார்க்கப்பட்ட அளவில் காணப்படவில்லை.

(ஆ) 2030 நிகழ்ச்சி நிரலைப் பற்றி கட்டிடத் திணைக்களம் அறிந்திருக்கவில்லை என்பதால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் அடைய வேண்டிய மைல்கற்கள் மற்றும் அதன் நோக்கங்கள் தொடர்பான இலக்கு சாதனைகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. மனித வள முகாமைத்துவம்

5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உண்மையான பதவியணியினர் மற்றும் ஆளனிக்கான ஊதியச் செலவினம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் வெற்றிடமாக உள்ள பதவியணியினர் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக ஆளணி வேதனமாக ரூபா 341 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி ஒரு ஆளுக்குரிய செலவு ரூபா 687,441 ஆகும்.

ஊழியர் வகை	அங்கீகரித்த எண்ணிக்கை	உள்ளபடியான எண்ணிக்கை		வெற்றிடங்களின் எண்ணிக்கை
		நிரந்தரம்	ஒப்பந்தம்	
சிரேஷ்ட மட்டம்	126	99	-	27
மூன்றாம் மட்டம்	24	07	01	17
இரண்டாம் மட்டம்	285	250	-	35
முதலாம் மட்டம்	178	136	03	42
மொத்தம்	**613**	**492**	**04**	**121**

சிரேஷ்ட மட்டத்தில் 27 பதவிகளும், மூன்றாம் மட்டத்தில் 17 பதவிகளும், இரண்டாம் மட்டத்தில் 35 பதவிகளும் முதலாம் மட்டத்தில் 42 பதவிகளும் என்ற வகையில் மொத்தமாக 121 வெற்றிடங்கள் நிறுவனத்தில் காணப்படுவதுடன் அவற்றை நிரப்புவதற்கு திணைக்களம் இதுவரை தவறியிருந்தது.

ஒப்பம்: எச்.என். ரனதுங்க
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

அத்தியாயம் 04 - செயலாற்றல் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் (செயல் நடவடிக்கைத்திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பிட்ட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100%- 90%	75%- 89%	50%- 74%
தயாரிக்கப்பட்ட படவரைபுகள்			73%
தயாரிக்கப்பட்ட வரைவுகள்		89%	
பராமரிப்பு பணிகளுக்கான மதிப்பீடுகள்			
கட்டுமான பணிகளுக்கான மதிப்பீடுகள்			73%
முடிக்கப்பட்ட செயற்திட்டங்கள் (செயற்திட்டங்களின் எண்ணிக்கை)			55%
பெறுமதி அடிப்படையில் முடிக்கப்பட்ட செயற்திட்டங்கள் (கட்டுமானம்)			72%
பெறுமதி அடிப்படையில் முடிக்கப்பட்ட செயற்திட்டங்கள் (பராமரிப்பு)			59%
பெறுமதி அடிப்படையில் முடிக்கப்பட்ட செயற்திட்டங்கள் (செயற்திட்ட முகாமைத்துவம்)			67%

அத்தியாயம் 05- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் (SDG) செயலாற்றல்

5.1 அடையாளம் காணப்பட்ட அந்தந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுதல்

இலக்கு/குறிக்கோள்	இலக்கு	குறிகாட்டி	சாதனையின் முன்னேற்றம்
அனைவருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்வதன் மூலம் அரச அலுவலக கட்டிடங்களை திட்டமிடுதல் மற்றும் வடிவமைத்தல்	கட்டுமான வேலைகளிற்கு சுற்றுச்சூழல் நட்புரீதியான மற்றும் பாதுகாப்பான பொருட்களைப் பயன்படுத்துதல்	கட்டிடங்களில் சுற்றுச்சூழலுக்கு பாதகமான பொருட்களின் பயன்பாட்டை 10% வரை குறைத்தல்	95%
அரச அலுவலக கட்டிடங்களுக்கும் அலுவலக கட்டிடங்களுக்கும் தகுந்த குடிநீர் வழங்குவதுடன், நீர்நிலைகளில் ஏற்படும் மாசுபாட்டை குறைத்து கழிவுநீரை முகாமைத்துவம் செய்தல்.	புதிய கட்டிடங்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீரை முறையாக (பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரம்) சுத்திகரிக்கப்பட்ட பின்னர் அகற்றுதல்.	2021 இல் 25 கட்டுமானங்களுக்கு	100%
அலுவலக இடம் மற்றும் சுற்றுப்புறத்தை சரியாக பூரணப்படுத்தல்	உட்புறத்திலும் சுற்றுச்சூழலிலும் காற்று மாசுபாட்டைக் குறைத்தல்	2021 இல் 25 கட்டுமானங்களுக்கு	100%
கடமைகளை எளிதாக்குவதற்கும் விரைவுபடுத்துவதற்கும் இணையம் மற்றும் வலைதள வசதிகளை வழங்குதல்	மலிவு விலையில் உட்கட்டமைப்பை நிர்மாணித்தல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான அணுகலை அதிகரிப்பதன் மூலம் வளங்களில் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல்	நிறுவனத்திலுள்ள 50% அதிகாரிகள்	100%

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை தெளிவுபடுத்துதல்

1) வள நுகர்வை குறைத்தல் (பாதுகாத்தல்)
2) வள மறுபயன்பாட்டை உச்சப்படுத்துதல் (மீண்டும் பயன்படுத்துதல்)
3) புதுப்பிக்கத்தக்க அல்லது மீள்சுழற்சி செய்யக்கூடிய வளத்தைப் பயன்படுத்துதல் (புதுப்பித்தல் / மீள்சுழற்சி)
4) இயற்கை சூழலைப் பாதுகாத்தல் (இயற்கையைப் பாதுகாத்தல்)
5) ஆரோக்கியமான, நச்சுத்தன்மையற்ற சூழலை உருவாக்குதல் (நச்சுத்தன்மையற்ற)

அத்தியாயம் 06 - மனித வள விவரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	அமைய/ஒப்பந்தம்	வெற்றிடங்கள்/(மேலதிகம்)
சிஷ்ேட நிலை	126	99		27
மூன்றாம் நிலை	24	07		17
இரண்டாம் நிலை	285	250	1	35
ஆரம்ப நிலை	178	136	3	42
மொத்தம்	**613**	**492**	**4**	**121**

6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுதல்

பணியாளர்கள் பற்றாக்குறை

1. அமைய அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட சாரதிகள்.

மிகை ஊழியர்கள்

திணைக்களத்தில் மிகை ஊழியர்கள் இல்லை.

6.3 மனித வள அபிவிருத்தி

இல.	பயிற்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை	திட்டத்தின் காலம்	மொத்த முதலீடு		திட்டத்தின் தன்மை- வெளி நாடு/ உள்நாடு	வெளியீடு/ பெறப்பட்ட அறிவு
				உள்நாடு	வெளி நாடு		
1	அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரித்து வழங்குதல் குறித்த செயலமர்வு	4	2 நாட்கள்	14000.00		உள்நாடு	
2	கட்டுமான செயற்திட்ட நிர்வாகத்தில் எம்.எஸ்சி. பட்டம்	1		103000.00		உள்நாடு	
3	பொறியியல் முதுமானி	1		324000.00		உள்நாடு	
4	கட்டுமான செயற்திட்ட நிர்வாகத்தில் எம்.எஸ்சி. பட்டம்	1		403000.00		உள்நாடு	
5	கேள்விப்பத்திரம்/ஐடி ஆவணம் தயாரிப்பது குறித்த ஒரு நாள் கருத்தரங்கு	2	1 நாள்	8000.00		உள்நாடு	
6	அரசாங்க கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் டிப்ளோமா (DIPPCA)	1	1 ஆண்டு	50000.00		உள்நாடு	
7	சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் மனோபாவம் மற்றும் தொழில் அறிவை மேம்படுத்துவதற்கான செயலமர்வு	40	2 நாட்கள்	140000.00		உள்நாடு	
8	இலங்கையில் பரவலாக்கப்பட்ட கழிவு நீர் முகாமைத்துவத்துக்கான ஜப்பானிய ஜோகோசன் குறித்த கருத்தரங்கு	9	1 நாள்	இலவசம்		உள்நாடு	
9	உயரமான கட்டிடங்களுக்கான பிளம்பிங் அமைப்புகள்	7	2 நாட்கள்	84000.00		உள்நாடு	
10	SLSS தரம்1 அதிகாரிகளின் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கான 3 மாத முகாமைத்துவ பாடநெறி	3	3 மாதங்கள்	52500.00		உள்நாடு	
11	கட்டமைப்பு பொறியியலில் எம்எஸ்சி-	1	1 ஆண்டு	452000.00		உள்நாடு	
12	கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான வடிவமைப்பு	3	4 நாட்கள்	36000.00		உள்நாடு	
13	விஞ்ஞான கட்டுமான செயற்திட்ட முகாமைத்துவ முதுமானி	1		403000.00		உள்நாடு	
14	நிதி பொருளாதார முதுமானி - 2021	02		392000.00		உள்நாடு	
15	காற்றுச் சீராக்கி முறையின் வடிவமைப்பு	01	15 நாட்கள்	32000.00		உள்நாடு	
16	இலங்கை பொறியியல் சேவை அதிகாரிகளுக்கான மொழித்தேர்ச்சிப் பாடநெறி (சிங்களம்/தமிழ்).	8		இலவசம்		உள்நாடு	
17	பொறியியல் சேவை தரம் 3 அதிகாரிகளுக்கான சேவை பயிற்சி.	11				உள்நாடு	
18	2021/2022 கட்டமைப்பு பொறியியலில் பிஜி டிப்ளோமா	1		350000.00		உள்நாடு	
19	தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான செயலாற்றல் மேம்பாட்டு பயிற்சி (அறிமுகம்)	37	½ நாள்	இலவசம்		உள்நாடு	
20	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பற்றிய கருத்தரங்கு	1		இலவசம்		உள்நாடு	

*பயிற்சித் திட்டம் நிறுவனத்தின் செயலாற்றலுக்கு எவ்வாறு பங்களித்தது என்பதை சுருக்கமாக குறிப்பிடுதல்

அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்குதல்/ இணங்காமை)	இணங்காமைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
01	**பின்வரும் நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணங்கப்பட்டது		
1.2	அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள்	இணங்கப்பட்டது		
1.3	வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பண கணக்குகள் (வணிக முற்பண கணக்குகள்)	தொடர்பற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்குகள்	தொடர்பற்றது		
1.5	விசேட முற்பணக் கணக்குகள்	தொடர்பற்றது		
1.6	ஏனையவைகள்	தொடர்பற்றது		
02	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் (நி.பி. 445)/**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 267/2018 இன் அடிப்படையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.2	தனிப்பட்ட ஊதியப் பதிவேடு / தனிப்பட்ட ஊதிய அட்டைகள் பேணப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
2.3	கணக்காய்வு ஐயவினா பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு பொழிப்புகள் (CIGAS) தயாரிக்கப் பட்டு, உரிய திகதியில் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதுல்	இணங்கப்பட்டது		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்குதல்/ இணங்காமை)	இணங்காமைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
2.7	இருப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.8	பொருளிருப்பு பதிவேடு பராமரிக்கப் பட்டு புதுப்பிக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
2.9	இழப்புக்கள் பதிவேடு பராமரிக்கப் பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.10	கடப்பாட்டுப் பதிவேடு பராமரிக்கப் பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.11	அடியிதழ் புத்தகங்கள் பதிவேடு (GA - N20) பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான தொழிற்பாட்டு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல். (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
3.2	நிதி அதிகாரக் கையளிப்புகள் நிறுவனத்திற்குள் தெரிவிக்கப்படுதல்	இணங்கப்பட்டது		
3.3	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக கொடுக்கல் வாங்கல்கள் பரீட்சிக்கப்படும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
3.4	2014.05.01 ஆந் தேதியிட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் அடிப்படையில் அரசு ஊதியம் வழங்கும் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதன் மூலம் கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட் டன.	இணங்கப்பட்டது		
04	**வருடாந்த திட்டங்களை தயாரித்தல்**			
4.1	ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
4.2	ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
4.3	ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
4.4	வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் தே.பா.தி. இற்கு சமர்ப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் உரிய திகதியில் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல்	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்கப்பட்டது/ இணக்கமின்மை)	இணக்கமின்மைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
05	**கணக்காய்வு ஐயவினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்திற்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப் பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
06	**உள்ளக கணக்காய்வு**			
6.1	உள்ளக கணக்காய்வுத் திட்டம் நிதி பிரமாணம் 134(2)DMA/1-2019 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியை கலந்தா லோசித்த பிறகு ஆண்டின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத் திற்குள் பதில் அளிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
6.3	உள்ளக கணக்காய்வு அறிக்கை களின் பிரதிகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40(4) இன் விதிமுறைகளின் படி முகாமைத்துவத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
6.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை களின் பிரதிகள் நிதி ஒழுங்குமுறை 134(3) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டது		
07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	1-2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு இணங்க ஆண்டிற்கு குறைந்தபட்சம் 04 கூட்டங்கள் நடைபெற்றது	இணங்கவில்லை	கொவிட் 19 தொற்று காரணமாக 03 கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டது.	
08	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	சொத்துக் கொள்வனவுகள் மற்றும் அகற்றல்கள் பற்றிய விபரங்கள் 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் படி கட்டுப்பாட்டாளர் ஆணையாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.	இணங்கப்பட்டது		
8.2	சுற்றறிக்கை ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு பொருத்தமான உரிமம் வழங்கும் அதிகாரி நியமிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள் மேலே கூறப்பட்ட சுற்றறிக்கையின் பந்தி 13 இன் அடிப்படையில் கட்டுப்பாட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்கப்பட்டது/ இணக்கமின்மை)	இணக்கமின்மைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
8.3	பொருள் மெய்மையாய்வு நடாத்தப் பட்டு 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்திடம் உரிய அறிக்கைகள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது.	இணங்கவில்லை	கோவிட் 19 காரணமாக	முடிக்கப்பட்ட தேதி 2021-12-15
8.4	பொருள் மெய்மையாய்வு மூலம் கூட்டிக்காட்டப்பட்ட அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் பிற தொடர்புடைய பரிந்துரைகள் தொடர் பில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ள காலப்பகுதியில் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.	இணங்கவில்லை	”மேற்படி”	-
8.5	கைதவிர்க்கப்பட வேண்டிய விடயங் களை அகற்றுவதற்கு நி.பி. 772 இன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல்.	இணங்கவில்லை	”மேற்படி”	2021-11-10
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழாம் வாகனங்களிற்கான நாளாந்த வாகன ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புகள் தயாரிக்கப்ப ட்டு உரிய தேதியில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன	இணங்கப்பட்டது		
9.2	அகற்றப்பட வேண்டிய வாகனங்கள் 06 மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் அகற்றப்படுதல்	இணங்கப்பட்டது		
9.3	வாகன பதிவு புத்தகம் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துக்கும் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	இணங்கப்பட்டது		
9.5	29.12.2016 ஆந் திகதிய30/2016 ஆம் இலக்கம் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் படி வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீண்டும் சோதிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
9.6	குத்தகைக்கு விடப்பட்டவரின் முழுமையான உரிமையானது குத்த கை காலத்திற்குப் பிறகு வாகன பதிவு புத்தக உரித்தாளருக்கு மாற்றப்பட்டன	இணங்கப்பட்டது		
10	**வங்கி கணக்குகளின் முகாமைத்துவம்**	இணங்கப்பட்டது		
10.1	வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, உரிய தேதிக்குள் கணக்காய்விற்கு தயாராக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
10.2	செயலற்ற கணக்குகள் மீளாய்வு ஆண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் தீர்க்கப்பட்டன	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்கப்பட்டது/ இணக்கமின்மை)	இணக்கமின்மைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
11	**நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் எல்லை மீறாமல் செலவழிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
11.2	நி.பி. 94(1) இன் படி ஆண்டின் இறுதியில் நிதி ஏற்பாடுக்கு மேலாக பொறுப்புகள் இல்லை	இணங்கப்பட்டது		
12	**அரச உத்தியோகத்தர் முற்பணங்கள் கணக்கு**			
12.1	எல்லைகள் கடைபிடிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
12.2	கடன்கள் மற்றும் நிலுவைகள் மீது காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப் பட்டது.	இணங்கப்பட்டது		
13	**பொது வைப்பு கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புகளை அகற்றுவது தொடர்பாக நி.பி. 57 (1) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
13.2	பொது வைப்புக்கள் கட்டுப்பாட்டு பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் உள்ள மீதி TSHD இற்கு அனுப்பப்பட்டது	இணங்கப்பட்டது		
14.2	நி.பி. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்காலிக உப கட்டுநிதிகள் பணி முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
14.3	நி.பி. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தற்காலிக உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டன.	இணங்கப்பட்டது		
14.4	கட்டுநிதிக் கணக்கின் மீதிகள் திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந் தம் கணக்கிணக்கம் செய்யப்பட்டது	இணங்கப்பட்டது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏனைய பிரமாணங்களின் பிரகாரம் வருமானத்திலிருந்து மீளப் பெறுதல்கள் செய்யப்பட்டது	தொடர்பற்றது	கட்டிடங்கள் திணைக்களம் கணக்கீட்டு உத்தியோகத்தர் கொண்ட நிறுவனம் இல்லை என்பதால் அது வருமானக் கணக்கைத் தயாரித்து நி.பி. 176 இன் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதில்லை.	
15.2	வருமானச் சேகரிப்புகள் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் நேரடியாக வருவாய்க் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை	தொடர்பற்றது		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவை வருமானத்தின் மீளளிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டன.	தொடர்பற்றது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்கப்பட்டது/ இணக்கமின்மை)	இணக்கமின்மைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	ஊழியர்களுக்கான ஊதியம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிற்கு செலுத்தப்பட்டமை	இணங்கப்பட்டது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களும் எழுத்துப்பூர்வமாக கடமைகள் ஒப்படைக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
16.3	20.09.2017 தேதியிட்ட 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இன் படி சகல அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறையின் அடிப்படையில் ஒரு தகவல் வழங்கும் அதிகாரி நியமிக்கப்பட்டு, உரியவாறு தகவல் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது.	இணங்கப்பட்டது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு இணையதளம் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் வழங்கப்பட்டு, இந்த இணையதளம் அல்லது மாற்று நடவடிக்கைகளால் பொது அதிகாரத்திற்கு எதிரான பாராட்டுகள் / குற்றச்சாட்டுகளை தெரிவிக்க பொதுமக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளமை	இணங்கப்பட்டது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10 ன் படி இரு ஆண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
18	**குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்**			
18.1	பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018(1) ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனத்தால் ஒரு குடிமக்கள் சாசனம்/ குடிமக்கள் வாடிக்கையாளர் சாசனம் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.	இணங்கப்பட்டது		
19	**மனித வள திட்டத்தை தயாரித்தல்**			
19.1	02/2018 ஆம் இலக்க 24.01.2018 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இல் உள்ள படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		

இல.	பிரயோகித்தக்க தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலை (இணங்கப்பட்டது/ இணக்கமின்மை)	இணக்கமின்மைக்கு சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமின்மையை தவிர்ப்பதற்கு பிரேரித்த திருத்த நடவடிக்கைகள்
19.2	மேற்கூறிய மனித வளத் திட்டத்தில் ஒவ்வொரு ஊழியருக்கும் ஆண்டுக்கு 12 மணிநேரத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.	இணங்கவில்லை		பூரணமான அறிக்கை 2022.03.31 இற்கு முன்னர் அனுப்பப்பட்டது.
19.3	மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01 இலுள்ள படிவத்திற்கு அமைய அனைத்து உத்தியோகத்தர்களிற்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.	இணங்கப்பட்டது		
19.4	மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவருக்கு கடமைகள் பொறிப்பளிக்கப்பட்டன. மேற்படி சுற்றறிக்கையின் 6.5. ஆம் பந்தியின் படி இயலளவு கட்டியெழுப்புதல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.	இணங்கப்பட்டது		
20	**கணக்காய்வு பந்திகளிற்கு பதிலளித்தல்**			
20.1	முன்னைய ஆண்டுகளிற்கான கணக்காய்வு அறிக்கைகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளமை	இணங்கப்பட்டது		